MAINTANACE

# புதிய பார்வை



படித்தால் வருத்தப்படுவீர்கள்

# போன



"எங்களுடன் சில ஆண்டுகள் கணவர் போல வாழ்ந்துவிட்டு பிறகு எங்களைக் கை கழுவி விட்டுச் சென்று விடுகிறார்கள். அவர்கள் மூலம் எங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் ஒரு பாதுகாப்பு இல்லை. நாங்களும் அனாதரவாக விடப்படுகிறோம்" என்று பல ஆந்திர மாநிலப் பெண்கள் ராஜமுந்திரியில் உள்ள மாவட்ட செஷன்ஸ் கோர்ட்டில் வழக்குத்தொடுத்து வருகின்றனர். இச் செய்தியைக் கேள்விப்பட்டு உண்மைநிலை என்னவென்று அறிய ராஜமுந்திரி சென்றோம்.

ராஜமுந்திரி சென்னை -- கல்கத்தா ரயில் மார்க்கத்தில் சென்னையிலிருந்து 580 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. புனித கோதாவரி நதிக்கரையில் உள்ள அழகிய நகரம். இவ்வூரில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் "கோதாவரி புஷ்கரம்" கடந்த ஆண்டில் பிரமாண்டமாக நடைபெற்றது. அந்த தினத்தில் லட்சக்கணக்கான மக்கள் கோதாவரி நதியில் புனித நீராடினர்.

ராஜமுந்திரியில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் இவ்வழக்குகள் பற்றி விசாரித்தபோது அங்கிருந்து 60 கிலோ மீட்டர் தள்ளி இருக்கும் ரம்பசோடவரம் என்ற ஊரிலிருந்துதான் வழக்குகளைத் தொடுத்த நபர்கள் வந்ததாகவும், அங்கு சென்று விசாரிக்க வேண்டும் என்று அறிந்தோம். மீண்டும் ரம்பசோடவரம் பயணம். அறுபது கிலோ மீட்டர் தூரம்தான் என்றாலும் பேருந்தில் பயணம் செய்ய மூன்று மணிநேரம் ஆனது.

ரம்பசோடவரம் என்ற பெயர் எங்கோ கேள்விப்பட்ட மாதிரி இருக்கிறதே என்று வழியில் விசாரித்தபோது இந்தியாவிலேயே முதல் முறையாக 7 ஐ.ஏ.எஸ். அதிகாரி

# கணவன்மார்கள்

ளை நக்ச
ளர்) கட
ரில்தான்
ற்றது
க்கு இ
லக்கியது.
பயணம் 

அந்த இ
ஆந்திரம், ஒ
மகாராஷ்டி
களில் பரவ
வனக்காடு
வனவாசம்
காடும் இத

ரம்பசோ
அங்குள்ள
சேவை அ
சிவராமகி
தப்பட்ட
டியாக வி
கொடூரம்
வைத்தது.

ஆந்திரா
ஐதாரபாத்
கம்மம் பே
இருந்து இங
மாற்றலாகி
ராக்டர்கள்
வது, பாலம்
போன்ற ப
கிறார்கள்.
துவங்க நக
ரூருக்கு
சில காலம்

இவர்க
மனைவி
குடும்பம்
எனவே, த
பாடு ஒ
கிறார்கள்.

இந்த உ
பெண்களி
களைத்
உன்னை ம
கிறேன்" எ
டன் தங்கி
கள். ஆதி
இவர்கள்
திருந்தாலு
பழக்க வ
பிடித்து வ
வழக்கப்படி
யை மூன்ற
இவர்களது
இல்லை.
அடிப்படை
அமைவதும்
மணம் மு
தங்களுக்கு
பயன்படுத்

"எனக்
ஆகவில்லை
மேல் வாழ
போகிறேன்

புதிய பார்

ளை நக்சலைட்டுகள் (P.W.G. பிரி னர்) கடத்திய சம்பவம் இந்த ஊரில்தான் 1987-ம் ஆண்டு நடைபெற்றது என்று சொன்னார்கள். மக்கு இலேசாக அடிவயிற்றைக் கலக்கியது. இருந்தாலும் நமது பயணம் தொடர்ந்தது.

அந்த இடத்தில் இருந்து தான் ஆந்திரம், ஒரிசா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், ஆகிய மாநிலங்களில் பரவியுள்ள தண்டகாருண்ய வனக்காடு (ராமாயணத்தில் ராமன் வனவாசம் போகும்போது வரும் காடும் இதுதான்) தொடங்குகிறது.

ரம்பசோடவரத்திறக்குச் சென்று அங்குள்ள 'சக்தி' என்னும் சமூக சேவை அமைப்பைச் சேர்ந்த டாக்டர். சிவராமகிருஷ்ணா மற்றும் சம்பந்தப்பட்ட பெண்கள் சிலரிடம் நேரடியாக விசாரித்தில் உண்மையின் கொடூரம் நம்மை உள்ளம் கலங்க வைத்தது.

ஆந்திராவில் உள்ள விஜயவாடா, ஐதாரபாத், விசாகப்பட்டினம், கம்மம் போன்ற பல நகரங்களில் இருந்து இங்கு அரசுப் பணியில் பலர் மாற்றலாகி வருகிறார்கள். கான்டிராக்டர்கள் இங்கு சாலை போடுவது, பாலம் கட்டுவது, வனவளர்ப்பு போன்ற பணிகளுக்காக வந்து தங்குகிறார்கள். கடைகள் மற்றும் தொழில் துவங்க நகர்ப்புறங்களிலிருந்து இவ்வூருக்கு பிசினஸ்மேன்கள் வந்து சில காலம் தங்குகிறார்கள்.

இவர்களெல்லாம் உடனடியாக மனைவியை அழைத்து வந்து இங்கு குடும்பம் வைக்க முடியாத நிலை. எனவே, தற்காலிகமாக மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்து கொள்கிறார்கள்.

இந்த ஊரில் வாழும் ஆதிவாசிப் பெண்களில் தங்களுக்குப் பிடித்தவர்களைத் தேர்ந்தெடுத்து "நான் உன்னை மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லி அவர்களுடன் தங்கி "குடும்பம்" நடத்துகிறார்கள். ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த இவர்கள் ஓரளவு நாகரிகம் அடைந்திருந்தாலும் தங்களது பரம்பரைப் பழக்க வழக்கங்களையே கடைப்பிடித்து வருகிறார்கள். அவர்களது வழக்கப்படி தாலிகட்டுவதோ, அக்னியை மூன்றுமுறை வலம் வருவதோ இவர்களது திருமண சடங்குகளில் இல்லை. வாய்மொழி உறுதியின் அடிப்படையிலேயே திருமண ஒப்பந்தம் அமைவதும் ஆதிவாசிகளின் பல திருமணம் முறைகளில் ஒன்று. அதைத் தங்களுக்கு வசதியாக நகரதிலிருந்து பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

"எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. உன்னோடுதான் இனி மேல் வாழ்நாள் முழுவதும் வாழப் போகிறேன்." என்றெல்லாம் அவர்



ஆந்திராவில் உள்ள ஆதிவாசிகளின் வாழ்க்கை முறைபற்றிய ஒரு ஆராய்ச்சி நூலில் அங்குள்ள கொய்யாக்கள், கொண்டா ரெட்டிகள், சமதாக்கள், கொண்டாடேர்கள், கம்மராக்கள் போன்ற பல ஆதிவாசி இனத்திவரின் திருமண முகை பற்றி விளக்கப்பட்டுள்ளன.

தாலிகட்டுதல், அக்னியை வைத்து வலம் வருதல் போன்ற சடங்குகள் அவர்களிடம் இல்லை. திருமணத்தின் போது உறவினர்களுக்கு விருந்து, பெரியவர்கள் வாழ்த்துதல் மட்டுமே இன்றியமையாத சடங்குகள். பேச்சு வார்த்தை மூலம் திருமணம் (காசா பெண்ட்லி), ஓடிப்போய் திருமணம் செய்து கொள்ளுதல், பரிசப்பணம் கொடுத்து திருமணம் செய்து கொள்ளுதல், கடத்தித் திருமணம் செய்து கொள்ளுதல், சேவை செய்வதன் மூலம் திருமணம், தர்ணா திருமணம் என்று பல திருமண முறைகள் உள்ளன.

தர்ணா திருமண முறையில் ஒரு ஆணோ, பெண்ணோ, தனக்குப் பிடித்த ஜோடியின் வீட்டிற்கு வந்து அமர்ந்து கொண்டு தனக்கு அவ்வீட்டுப் பிள்ளை அல்லது பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தால்தான் போவேன் என்று அடம் செய்து மணந்து கொள்ளலாம். மேலே சொல்லப்பட்ட எந்த வகைத் திருமணமாக இருந்தாலும் எல்லாமே அவர்களைப் பொறுத்தவரை ஏற்புடையதே. ஆசைநாயகி வைத்துக் கொள்ளுதல் ஆதிவாசிகளிடம் இல்லை.

அதே திருமண முறைப்படி நாங்களும் திருமணம் செய்து கொள்கிறோம் என்று சொல்லி நகரத்தவர்கள் வந்து ஆதிவாசிப் பெண்களைத் திருமணம் என்ற பெயரில் தன் வலையில் விழ வைத்து பின்னர் அது தங்களது இந்து திருமண சட்டப்படி செல்லாது என்று கைவிட்டு விடுகிறார்கள்.

ஆதிவாசிகளின் திருமண முறைகள், பழக்கவழக்கங்களுக்கு அரசியலமைப்புச் சட்ட அங்கீகாரம் அளிக்கப்படும் என்று ஐந்தாண்டுத் திட்ட அறிக்கைகளில் ஒரு வரி இடம் பெறும். அது எட்டாவது திட்ட அறிக்கை வரை ஒரு வாசகமாகவே இடம் பெற்றுவருகிறது. சட்ட அங்கீகாரம் இன்னும் அளிக்கப் படவில்லை. சட்ட அனுமதி அளிக்கப் பட்டால் ஆதிவாசிகளின் "குலப் பஞ்சாயத்து" ஒரு திருமணத்தை அங்கீகரித்த் பிறகு அதை வேறு காரணம் காட்டி செல்லாது என்று எவரும் சொல்ல முடியாது. அது வரை வெளி உலகத்தவர் ஆதிவாசிகளை ஏமாற்றுவது தொடரக் கூடும்.


வெளி உலகத்தவர் தங்களை ஏமாற்றக் கூடும் என்று ஒரு அச்சம் அவர்களுக்கு இருக்காதா? விட்டில் பூச்சிகளாக அவர்களது வலையில் ஆதிவாசிப் பெண்கள் விழுவதேன்? நாம் ஆதிவாசியாகப் பிறந்து விட்டோம். நமது வாரிசுகளாவது மேட்டுக் குடியாக மாறட்டும்; கல்வியறிவு பெற்று கரைசேரட்டும் என்ற கனவு அவர்களை அதல பாதாளத்தில் தள்ளி விடுகிறது. மேலும், ஆதிவாசிகள் கூலிவேலை செய்பவர்கள். ஏழ்மையில் வாழ்பவர்கள். சோப்பும், பவுடரும், சென்ட்டும், நைலக்ஸ் புடவைகளும் அன்பளிப்பாகப் பெறும்போது அதில் கிறங்கித்தான் போய் விடுகிறார்கள். ஆதிவாசிப் பெண்களைத் திருமணம் செய்து கொள்பவர்களில் 60 சதவிகிதத்தினர் அவர்களது அழகு மற்றும் விசுவாசத்தால் கவரப்பட்டு அவர்களுடேனே காலங்காலமாய் வாழ்வதுமுண்டு. ஏமாற்றுவோர் மூன்றிலொருபங்கே என்பது ஆறுதலளிக்கும் ஒரு விஷயமாகும்.

ஆதிவாசிப் பெண்கள் ஏமாறுவதற்கு முக்கியமான காரணம் ஆதிவாசிகளிடையே எழுத்தறிவு பெற்றோர் நூற்றுக்கு ஒன்பது பேர் மட்டுமே என்பதேயாகும். அவர்களில் படித்த பெண்கள் 3 சதவிகிதம் மட்டுமே! படிப்பும், விழிப்புணர்வுமே அவர்களை ஏமாறுவதிலிருந்து காப்பாற்றி நல்வழிகாட்ட முடியும்.

-- ராம்.


கள் சொல்வதை இந்த இளம் பெண்கள் முழுமையாக நம்பி அவர்களிடம் மனைவியாக வாழ்கிறார்கள். இடையில் சிலருக்குக் குழந்தைகளும் பிறக்கின்றன. சில ஆண்டுகள் கழித்து ஒரு நாள் வெளியூர் போகிறேன் என்று சொல்லிவிட்டுச் செல்லும் "கணவன்" நீண்ட நாளாகியும் திரும்பி வருவதில்லை. விதியை நொந்து கொண்டு "கணவன்" விட்டுச் சென்ற குழந்தைகளோடும், நினைவுகளுடனும் தங்களது எதிர்காலத்தைத் தள்ளுவதற்குப் போராட வேண்டியிருக்கிறது. சமூக அவமதிப்பும் அவர்களுக்கு வந்து சேருகிறது.

இந்த நிலை பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வருகிறதாம். ரம்பசோடவரத்தில் மட்டும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதில்லை. காடுகள், மலைகள் மற்றும் காடுகளை ஒட்டிய பகுதிகளில் ஆந்திராவில் 9 மாவட்டங்களில் ஆதிவாசி மக்கள் வாழ்கிறார்கள். இந்த மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஆதிவாசி வளர்ச்சி நிறுவனம் (Integrated Tribal Development Agency) என்னும் அரசுத்துறை பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் அமலில் உள்ள பகுதிகளை "ஏஜன்சி ஏரியாக்கள்," என்று அழைப்பது உண்டு. ஏஜன்சி ஏரியாக்களில் பல வற்றில் இத்தகைய ஏமாற்றுதல்கள் நடைபெற்று வருகின்றன. "ஏஜன்சி ஏரியாக்களில் அழகான பெண்கள் வெளியூர்க்காரர்களுக்குத்தான் அமைவார்கள்" என்று ஒரு பழமொழி இங்கு உண்டு.



பாக்கலப்பட்டி லட்சுமி

கூரா நர்சம்மு



இனிமேலும் தங்களுக்கு நடைபெறும் அநியாயத்தை 'விதியே' என்று தாங்கிக் கொள்ள ஆதிவாசிப் பெண்கள் தயாராக இல்லை. நீதிமன்றங்களின் மூலம் நியாயம் கோரிப் போராடத் தொடங்கி விட்டனர். இத்தகைய வழக்குகளில் நீண்ட வழக்கு இருளப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த வெம்ப கங்கம்மா என்ற பெண்மணியால் 1987--ம் ஆண்டு பிப்ரவரியில் போடப்பட்டது. முதலில் ரம்பசோடவரத்தில் உள்ள விசேஷ மொபைல் கோர்ட், பின்னர் ராஜமுந்திரியில் உள்ள மாநில உயர்நீதிமன்றம். பின்னர் ஐதராபாத் உயர்நீதிமன்றத்திறக்கு மாற்றம் என்று இன்னும் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளைக் கடந்து அவர் போராடிக் கொண்டிருக்கிறார். (அவரது வழக்கின் முழுவிவரம் தனியாகக் கொடுக்கப்பட்டுருக்கிறது) இவரை ஏமாற்றி ஒரு பார்வையற்ற ஆண் பிள்ளையையும் கொடுத்து பின்னர் எந்த உதவியும் செய்யமாட்டேன் என்று ஏய்ப்பவர் ஒரு காண்டிராக்டர்.

## நீதி கேட்டு 10 ஆண்டாகப் போராடும் கங்கம்மா

ராஜமுந்திரி அருகில் உள்ள இருளப்பள்ளி என்ற கிராமத்தில் கூலிவேலை செய்து பிழைத்துவரும் ஆதிவாசிப்பெண் வெம்ப கங்கம்மா. 10 ஆண்டுகளுக்கு முன்பு இருளப்பள்ளி பகுதிக்கு ஒரு காண்டிராக்ட் வேலைக்காக வந்த சத்தியநாராயணா கங்கம்மாவைப் பார்த்து "நான் உன்னை மணந்து கொள்கிறேன். நாம் ஒன்றாக வாழலாம்" என்ற சொல்லவும் அதற்குச் சம்மதித்தார் கங்கம்மா.

கங்கம்மாவின் வீட்டிலேயே தங்கி அவருடன் குடும்பம் நடத்தினார் சத்தியநாராயனா. இரண்டு ஆண்டுகள் கழிந்தன. அவர்களுக்குப் பார்வையற்ற ஒரு ஆண்பிள்ளை பிறந்தது. அப்பிள்ளைக்கு நாகேஸ்வரராவ் என்ற பெயரும் வைத்தார்கள். இந்த சமயத்தில் அவரது காண்டிராக்ட் வேலையும் முடிந்தது. ஒரு நாள் மதிய வேளையில் சாப்பிட்டு விட்டுக் கை கழுவப் போனவர், தனது மனைவியையும் குடும்பத்தையும் சேர்த்தே கை கழுவி விட்டுப் போய் விட்டர்.

வயதான தன் அம்மாவையும், பார்வையற்ற தன் பிள்ளையையும் வைத்துக் காப்பாற்றி தன் வயிற்றுக்கும் சம்பாதிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு வந்தது. 5 ஆண்டு வரை தாக்குப் பிடித்து முடியாமல் போகவே தனக்கும், தன் மகனுக்கும் வாழ வழி சொல்லுமாறு ரம்பசோடவரம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார் கங்கம்மா. வழக்கு பிப்ரவரி 87--ல் எடுத்து கொள்ளப்பட்டது. நீதிமன்ற விசாரணைக்குப்பின் கங்கம்மாவுக்கு மாதம் ரூ300/-ம், பார்வையற்ற மகனான நாகேசுவரராவுக்கு ரூ.200/-ம் ஜீவனாம்சமாக சத்தியநாராயணா கொடுக்க வேண்டுமென்று ரம்பசோடவரம் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் நவம்பர் 87--ல் தீர்ப்பளித்தார்.

பிரச்சினை அத்துடன் தீர்ந்து விடவில்லை. சத்தியநாராயணா மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் ராஜமுந்திரியில் அப்பீல் செய்தார். அந்த அப்பீலில், தான் கோக்கவரம் என்ற ஊரில் "கௌரவமாக" வாழ்ந்து வருவதாகவும், "அப்பழுக்கற்ற நடத்தை" உள்ளவரென்றும் கங்கம்மாவும் அவர் மகனும் தனக்கு "அறிமுகமே இல்லாதவர்கள்" (Strangers) என்றும் எனவே கீழ்க் கோர்ட்டின் ஜீவனாம்ச தீர்ப்பை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கோரியிருந்தார்.

கங்கம்மாவின் மனுவில் உள்ள ஒரு வார்த்தை அவருக்கே எதிரியாக வந்து அமைந்தது. தான் அவருக்கு "ஆசைநாயகி"யாக வாழ்ந்ததாக அந்த மனுவில் கங்கம்மாவின் வழக்கறிஞர் குறிப்பிடிருந்தார். இதை ஆதாரமாக வைத்து மாவட்ட நீதிமன்றத்தில் கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டது. மாவட்ட நீதிபதி தன்னுடைய தீர்ப்பில், சி.ஆர்.பி.சி செக்ஷன் 488--ன் படி சட்டப்படியாக திருமணம் செய்து கொண்ட மனைவிக்கே ஜீவனாம்சம் கேட்க உரிமை உண்டு என்றும் நீண்ட காலமாக ஒருவருடன் சேர்ந்து வாழும் பெண்ணுக்கு அவரிடம் ஜீவனாசம் கேட்க உரிமையில்லை என்றும் கூறினார். மேலும், அவர்களுக்குப் பிறந்ததாகக் கூறப்படும் பிள்ளயின் பிறப்பு சம்பந்தமான ஆதாரம் எதுவும் கங்கம்மாவிடம் இல்லை என்பதால் அந்த பையனுக்கும் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்பில் கூறப்பட்டது.

மீண்டும் ஐதராபாத்தில் உள்ள உயர்நீதி மன்றத்திற்கு இவ்வழக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வழக்கினைப் பரிசீலித்த உயர்நீதி

பாக்கலப்பட்டி லட்சுமி பார்ப்பதற்கு லட்சணமாக இருப்பார். மரேட்முள்ளி என்ற கிராமத்தில் வாழ்ந்து வருகிறார். இவ்வூருக்கு வந்த கான்டிராக்டர் சூரியநாராயண ராஜுவுக்கு லட்சுமியை வளைத்துப் போடவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது." உன்னை என் மனைவியாக ஏற்றுக்கொள்றேன்.'' என்ற பசப்பு வார்த்தைகளைக் கேட்ட லட்சுமி கசாப்புக் கடைக்காரனை ஆடு நம்புவது போல அவரை நம்பினார். இரண்டு ஆண்டுகள் இவர்களது தாம்பத்யம் நீடித்தது. ஆண் குழந்தை பிறந்தது ஜோகிராஜு என்று பெயர் சூட்டி மகழ்ந்தாள் லட்சுமி. அந்த சமயத்தில் இவர்களது வாழ்வில் புயல் வீசியது. சூரிய நாராயண ராஜுவின் வீட்டில் அவருக்குத் திருமண நிச்சயம் செய்தனர். மணப்பெண் லட்சுமி அல்ல. ஏராளமான வரதட்சணைத் தொகையைக் கொண்டு வரும் நாகமணி. என்ற இளம்பெண். இது விஷயம் எதையும் லட்சுமிக்கு தெரிவிக்காது சூரிநாராயணன் மறைத்துவிட்டார்.

தனது கணவன் சூரியநாராயணனைக் காணவில்லை என்றதும் விசாரித்து அவன் சொந்த ஊரின் பெயரைக் கண்டுபிடித்து அங்கேயே சென்றுவிட்டார் லட்சுமி.

நாகமணியைத் தருமணம் செய்து கொண்டாலும், உன்னையும் என் மனைவியாக வைத்துக் காப்பாற்றுகிறேன் என்று ஊர்ப் பெரியவர்களை வைத்து பஞ்சாய்த்து செய்தார்கள். ஆதிவாசி லட்சுமிக்கு ஆதராவாகப் பேசுபவர்கள். அங்கே அதிகமில்லை. ஆதிவாசிகள் இனத்தில் இரண்டுபேரைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வது ஒன்றும் பெரிய பாவமுமில்லை. ஆதலால் லட்சுமி சமாதானப் அடைந்து திரும்பினாள். ஆனால், சொன்னவாக்கை காப்பாற்றவில்லை அந்த கான்டிராக்டர். லட்சுமியை 'அம்போ' வென்று விட்டு விட்டார்.



தண்டகாருண்ய வனம்

ரம்பசோடவரம் கடைத்தெரு



பொறுத்துப் பார்த்த லட்சுமி வேறு வழியின்றி தன்னைப் பராமரிப்பதற்கான உதவித்தொகையாவது தருமாறு வழக்கு தொடுத்தார். வழக்கு விசாரணைக்கு வருவதைக் கேள்விப்பட்ட ராஜு, லட்சுமியை வந்து பார்த்தார். "உன்னை நான் கைவிடுவேனா'' என்று உருகினார். சில மாதங்கள் லட்சுமியுடனே தங்கினார். தன் கணவர் திருந்தி விட்டதாகவும், தன்னைக் கைவிடமாட்டார் என்றும் "மீண்டும்" நம்பினார் லட்சுமி. வழக்கு விசாரணையின் போது போகவிடாமல் அவரைத் தடுத்துவிட்டார் ராஜு. இதற்கிடையில் லட்சுமிக்கு ராஜுவின் மூலம் ஆல்மநாத் ராஜு என்னும் இரண்டாவது

56--ம் பக்கம் பார்க்க.....



மன்ற நீதிபதி மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்காமல், ஏதாவது ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு கங்காம்மாவுக்கு ஆலோசனை கூறி வழக்கை மீண்டும் விசாரிக்குமாறும் கீழ்க் கோர்ட்டிற்கு உத்தரவிட்டார். வழக்கு இப்போது கீழ்க்கோர்ட்டில் உள்ளது.

இதற்கிடையில் வழக்கின் கதாநாயகர் சத்திய நாராயணா இருளப்பள்ளிக்கு வந்து சமாதானம் பேசியிருக்கிறார். "5,000 ரூபாய் கொடுத்து விடுகிறேன். வழக்கை வாபஸ் செய்து கொள்ளுங்கள்'' என்று கேட்டிருக்கிறார். கங்கம்மா இணங்கவில்லை.

ரம்பசோடவரத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கங்கம்மாவின் வீட்டுக்குச் சென்று அவரையும், அவரது மகனையும் சந்தித்தோம். நாகேசுவரராவிடம் "உங்கள் அப்பா இங்கு வந்த போது அவரிடம் பேசினீர்களா?'' என்று கேட்டபோது நாகேசுவராவின் முகம் சிவப்பேறியது. "அந்தப் பாவியின் முகத்தைப் பார்க்கக்கூடாது என்பதற்குத்தானோ என்னவோ, நான் பார்வை இல்லாமலேயே பிறந்து விட்டேன். நான் ஏன் பிறந்தேன் என்பதன் பொருள் எனக்குப் புரியவில்லை. எனக்குக் கண் இல்லாததால் என்னால் கூலிவேலைக்குச் சென்றும் சம்பாதிக்கவும் முடியாது. அம்மா கூலிவேலை செய்து சம்பாதித்துத்தான் என்னை காப்பாற்ற வேண்டியிருக்கிறது. என் எதிர்காலம் எப்படி அமையுமோ?'' என்று கலங்கினார்.

கங்கம்மாவுக்கு ஆதரவாக இருந்த ஒரே ஜீவனான அவரது அம்மாவும் சமீபத்தில்தான் மரணமடைந்தாராம். "மற்ற ஆதிவாசிப் பெண்களைப் போல் நானும் ஒரு ஆசிவாசியையே தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொண்டிருந்தால் என் வாழ்க்கை எப்படியோ அமைந்து போயிருக்கும். வெளியூரைச்சேர்ந்த ஒரு ஆளைத் தேர்ந்தெடுத்ததால் என் வாழ்க்கை ஏமாற்றமும், போராட்டமும் நிறைந்ததாக மாறிவிட்டது. இருந்தாலும் நீதி கேட்டு இறுதி வரை போராடுவேன் இருக்கிறேன்.'' என்கிறார் கங்கம்மா.

கங்கம்மா வழக்கில் திருப்புமுனை ஏற்படுத்தும் வகையில் சென்னை உயர் நீதிமன்றம் ஒரு வழிகாட்டி உள்ளது. (இரண்டு தாய்மார்களுக்கிடையே) ஒரு குழந்தை யாருடையது என்று பிரச்சினை வரும் போது அவர்களது மரபுக் கூறு அணுக்களை (டிஎன்.ஏ) சோதனை செய்து உறுதிப் படுத்தலாம் என்று ஒரு தீர்ப்பு உள்ளது. அதன் அடிப்படையில் சத்திய நாராயணவின் டி.என்.ஏ. அவரது மகனான நாகேஸ்வரராவிடம் இருப்பது நிரூபிக்கப்பட்டால் அப்பா நான் தான் என்று அவர் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். சட்டப்படியும் அது சொல்லும்'' என்கிறார் சக்தி அமைப்பைச் சேர்ந்த டாக்டர் சிவரமகிருஷ்ணா.

35--ம் பக்கத் தொடர்ச்சி

குழந்தையும் பிறந்தது. வழக்கு தள்ளுபடியானதும் தன்வேலை முடிந்துவிட்டது என்று முதல் மனைவியுடன் தங்கப் போய்விட்டார் ராஜு. இரண்டு பிள்ளைகளையும், லட்சுமியையும் கவனிப்பது இல்லை. இப்போது மீண்டும் வழக்குத் தொடர்ந்திருக்கிறார் லட்சுமி.

சட்டப்படி திருமணம் செய்து கொள்கிறவர்கள் நிலையாவது உத்திரவாதமுடையதாக இருக்கிறதா? அதுவும் இல்லை! சாம்பிளுக்கு ஒன்று. ஜனகாகாந்தம்மா என்ற ஆதிவாசி பெண் அவ்வூருக்கு விவசாயத்துறையில் வேலை பார்க்க மாற்றலாகி வந்த மல்லையா என்பவரை சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொண்டார்.

இது நடந்தது 1978--ம் ஆண்டு. சுமார் ஒன்றரை ஆண்டுகள் அவ்வூரில் பணியாற்றிய மல்லையா வேலையில் இருந்து மாற்றலாகிச் சென்றுவிட்டார். மனைவியையும் மறந்துவிட்டார். ஜீவனாம்சம் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தும் வெறும் ரூ.100 மட்டுமே ஜீவனம்சத் தொகையாகப் பெற முடிந்தது.

இதற்கிடையில் மல்லையா பதவியில் இருந்து ஓய்வு பெற்றுவிட் டார். ஓய்வு பெற்ற கையோடு வேறு மாவட்டமான 'கம்மம்' சென்று அங்குள்ள வெங்கடாபுரத்தில் தங்கிவிட்டார். கம்மம் மாவட்ட பென்ஷன் வழங்கும் அலுவலரிடம் காந்தம்மா அந்த நூறு ரூபாயைப் பென்ஷனிலிருந்து பிடித்துத் தருமாறு விண்ணப்பித்தார். கம்மம் மாவட்ட மாஜிஸ்திரேட்டிடம் இதற்கான தனி ஆணை வழங்கினால்தான் பிடிக்கமுடியும் என்று பதில் வந்தது. மீண்டும் நீதிமன்றப் பயணம் காந்தம்மாவுக்குத் தொடருகிறது.


கூரா நர்சம்மு என்ற பெண்ணையும் இதே போன்று வேலை மாற்றலாகி வந்த ஒருவர் "திருமணம்" செய்து அதன் மூலம் இரண்டு பெண் குழந்தைகளைக் தந்துவிட்டு இடம் தெரியாமல் போய்விட்டார்.

தாப்பள்ளியைச் சேர்ந்த மங்கம்மாவைத் திருமணம் செய்து பெண் குழந்தையும் பெற்று பின்னர் அவரைகைவிட்டு வேறு ஊருக்குச் சென்று தங்கிவிட்டார். தீயணைப்புத் துறையைச் சேர்ந்த பெஞ்சுமின்;

பெடகட்டா கிராமத்தைச் சேர்ந்த எரடாலட்சுமியைத் திருமணம் செய்து மூன்று ஆண்டு வாழ்ந்து வேறு ஊருக்கு மாற்றலாகிச் சென்று அங்கேயே தங்கி விட்டவர் ஆசிரியர் கணபதி. இப்படி ஆதிவாசிப் பெண்களை ஏமாற்றுவோரின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

நாம் ரம்பசோடவரம் சென்ற போது அருகிலுள்ள பிர்திவாடா என்ற ஊரில் நாகம்மா என்ற 22 வயது பெண்ணை ஒருவர் சமீபத்தில் இவ்வாறு ஏமாற்றிவிட்டுச் சென்றுவிட்டார் என்று கேள்விப்பட்டு நேரடியாக அங்கு சென்றோம்.

ரம்பசோடவரத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் பிர்திவாடா உள்ளது. பேருந்து செல்லும் சாலையிலுருந்து இறங்கி சிறிது தூரம் நடந்து உள்ளே சென்றோம். பனை ஓலை வேய்ந்த, திண்ணை அமைந்த குடிசை வீடு. அங்கு சென்று நாகம்மாவை என்ன நடந்தது என்று விசாரித்த போது அவர் சொன்னார், "நான் சிறுவயதிலிருந்தே காட்டில் உள்ள அரசுப் பண்ணையில் வேலைபார்த்து வருகிறேன். அங்கு புதிதாக மாற்றலாகி வந்த சந்திர



சேகர் என்ற அதிகாரிக்கு என்னைப் பார்த்ததும் பிடித்துவிட்டது. வனத்துறையில் உள்ள அவருக்குக் கீழ்வேலை பார்க்கும் வாட்சர், கார்டு இவர்கள் மூலமாக என்னைத்திருமணம் செய்து கொள்ள சம்மதிக்குமாறு தூது விட்டார். நான் முதலில் மறுத்துவிட்டேன். பிறகு அவர் விடாமல் நச்சரிக்கவே நான் சம்மதம் கொடுத்துவிட்டேன். பெண் ஜென்மம் தானே! ஐயோ நம்மை மனதார விரும்பித்தானே இவர் இவ்வளவு நாட்களாக விடமால் நச்சரித்து வருகிறார் என்று உள்மனம் சொல்லியது. எங்கள் வீட்டில் உள்ளவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவே செய்தார்கள். உன்னை என் மனைவியாக வைத்துக்கொள்கிறேன் என்று சொல்லி என்னை அழைத்துச் சென்று அவர் குடித்தனம் வைத்திருந்தார். இங்கிருந்து பக்கத்தில் ஒரு ஊருக்கு அவர் மாற்றலாகிச் சென்ற போதுகூட என்னையும் அங்கு அழைத்துச் சென்று குடும்பம் நடத்தினார்."

"அவர் எப்போதும் உங்களுடனே இருந்தாரா? அவரது சொந்த ஊருக்குப் போகவில்லையா? அப்போது உங்களிடம் என்ன சமாதானம் சொன்னார்?" என்று குறுக்கிட்டுக் கேட்டபோது.

"ஆபீஸ் வேலையாக 'டூர்' போவதாகச்சொல்லிவிட்டு பதினைந்து நாளைக்கொருதரம் வெளியூர் சென்று சில நாட்கள் கழித்து வருவார். நான் அவர் சொல்வதை நம்பியிருந்தேன். எட்டு ஆண்டுகள் அவருடன் குடும்பம் நடத்தி இருக்கிறேன். எங்களுக்கு இதோ இந்தப் பையன் பிரதாபரெட்டியும் இருக்கிறான். இவனுக்கு 6 வயது. குடும்பத்திற்கு மாதம் 500 ரூபாய் செலவுக்குக் கொடுப்பார். அவரது சம்பளம் எவ்வளவு என்றெல்லாம் நான் கேட்பதில்லை.

திடீரென்று கடந்த 6 மாதமாக அவரைக் காணவில்லை. அவரது அலுவலகத்திற்குச் சென்று விசாரித்த போது அவர் எங்கு மாற்றலாகிப்போனார் என்று எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இப்போது 'சக்தி' என்ற சமூக சேவை அமைப்பிடம் என் கணவரைப் பற்றிச் சொல்லி முறையிட்டபோது அவர்கள் விசாரித்துச் சொன்னார்கள். என் கணவர் விஜாயவாடாவுக்கு மாற்றலாகிச் சென்றுள்ளாராம். அவருக்கு ஒரு மனைவியும் இரண்டு குழந்தைகளும் கூட இருக்கிறன்றார்களாம். இனிமேல் என்கதியும், என் குழந்தையும் என்ன ஆவோம் என்று கவலையாக இருக்கிறது."

நாகம்மாவின் கணவர் மீண்டும் அவரோடு சேர்ந்து வாழ்வாரா? அல்லது அவருக்கு ஜீவனாம்சமாக ஒரு தொகையை மாதாமாதம் தருவாரா? இத்தகைய அப்பாவி ஆதிவாசிப் பெண்களை வெளியுலகத்தார் ஏமாற்றி வருவது இன்னும் எவ்வளவு நாட்களுக்குத் தொடரப் போகிறது?. ராம்பசோடவரத்திலிருந்து திரும்பி வரும்போது இந்த கேள்விகள் நம் மனதை அலைக்கழித்தன.

-- ராம்குமார்.